2015 செப்டம்பர் 15] [பேரவைத் தலைவர்]

(குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, என்னவென்று சொல்லுங்கள்.

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழக சிறையில் இருக்கக்கூடிய ஆயுள் தண்டனைக் கைதிகளை கருணை அடிப்படையில் முன்கூட்டியே விடுதலை செய்ய வேண்டும் என்ற கவன ஈர்ப்புத் தீர்மானத்தினை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுகுறித்து நீங்கள் கவன ஈர்ப்பு முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அது என் ஆய்வில் இருக்கிறது. நீங்கள் சொன்னதை நான் பதிவு செய்துவிட்டேன். (குறுக்கீடு) அது எனது ஆய்வில் இருக்கிறது. பிறகு பார்த்துக்கொள்ளலாம். உட்காருங்கள்.

(மனிதநேய மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

5. கவன ஈர்ப்பு

ஸ்ரீவில்லிபுத்தூர், எஸ். கொடிக்குளம் மற்றும் எஸ். இராமச்சந்திராபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, எஸ். கொடிக்குளம் மற்றும் எஸ். இராமச்சந்திராபுரம் ஆகிய பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியததுவம் உர்ய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2015 செப்டம்பர் 15

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த விவர அறிக்கை பேரவையில் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

விருதுநகர் மாவட்டம், எஸ். கொடிக்குளம் மற்றும் எஸ் .இராமச்சந்திராபுரம் ஆகிய கிராமங்கள், வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,15,050. இவ்வூராட்சி ஒன்றியத்தில் குன்னூர் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம், கோட்டையூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், நத்தம்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், வ. புதுப்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் ஆகிய நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எஸ். கொடிக்குளம் கிராம மக்கள்தொகை 1,042. இக்கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இக்கிராமம், எஸ். கொடிக்குளம் துணை சுகாதார நிலையம், வ. புதுப்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தினைச் சார்ந்தது.

எஸ். இராமச்சந்திராபுரம் கிராமத்தின் மக்கள்தொகை 3,490. இக்கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இக்கிராமம், எஸ். இராமச்சந்திராபுரம் துணை சுகாதார நிலையம், குன்னூர் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தினைச் சார்ந்தது. எஸ். இராமச்சந்திராபுரம் கிராமத்திலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் குன்னூர் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம் மக்கள்தொகையின் அடிப்படையிலும், இரு சுகாதார நிலையங்களுக்கு இடையேயான தூரத்தின் அடிப்படையிலும், வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம், எஸ். கொடிக்குளம் மற்றும்

2015 செப்டம்பர் 15] [டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

எஸ். இராமச்சந்திராபுரம் ஆகிய கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதில் பல்வேறு விவரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

எஸ். கொடிக்குளம் பேரூராட்சி என்பது மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதியாகும். இந்தப் பேரூராட்சியினுடைய மக்கள்தொகை 13,287. விவர அறிக்கையில் இது 1,042 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இந்தப் பேரூராட்சியை ஒட்டிய பகுதியான ராமசாமியாபுரம் சிற்றூராட்சியின் மக்கள்தொகை 4,905. சேதுநாராயணபுரம் சிற்றூராட்சியின் மக்கள்தொகை 3,371. கன்சாபுரம் சிற்றூராட்சியின் மக்கள்தொகை 4,660. ஆக, எஸ். கொடிக்குளம் பேரூராட்சியைச் சுற்றியுள்ள 2 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் 26,223 மக்கள் வசிக்கின்றனர். இந்தப் பகுதி மலைக் கிராமப் பகுதியாகும். இளவன்கோவில், பிளவக்கல் போன்ற பகுதிகளில் பழங்குடியின மக்கள் வசித்துவருவதாலும், விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் நிறைந்த பகுதியாக உள்ளதாலும், எஸ். கொடிக்குளம் பேரூராட்சியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, எஸ். இராமச்சந்திராபுரம் கிராமம் நெசவாளர்கள் நிறைந்த பகுதி. இந்தக் கிராமத்தின் அருகிலுள்ள சுந்தரபாண்டியபுரம் பேரூராட்சியில் 8,427 பேரும், ரெங்கப்பநாயக்கன்பட்டியில் 5,312 பேரும், . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, கேள்வியைக் கேளுங்கள்.

முற்பகல் 11-55

திரு. வெ. பொன்னுப்பாண்டி: எஸ். இராமச்சந்திராபுரம் சிற்றூராட்சியில் 4,444 பேரும், மேலகோபாலபுரம் சிற்றூராட்சியில் 2,391 பேரும், ஆக மொத்தம் 20,574 பேர் வசிக்கின்றனர். அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் அரசு மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், பத்து கிலோ மீட்டர் தூரத்திலுள்ள

வத்திராயிருப்பு அல்லது பத்து கிலோ மீட்டர் தூரத்திலுள்ள குன்னூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் செல்ல வேண்டிய நிலையுள்ளது. நெசவாளர்கள் மற்றும் மலைக் கிராமங்கள் நிறைந்த பகுதி என்பதால், அந்த இரண்டு கிராமங்களுக்கும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு மருத்துவத்தின் தேவையை அறிந்து, மருத்துவ சேவையை ஒரு மகத்தான சேவையாக, தமிழகத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் உறுதிப்படுத்தியிருக்கக்கூடிய ஒரு முதலமைச்சர், நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி)*

கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் மருத்துவ சேவை ஏழைகளுக்கு எட்டாக் கனியாக இருந்த நிலையை மாற்றி, இன்றைக்கு மருத்துவ சேவை என்கிற மகத்தான சேவையை, ஏழைகளுக்கு எட்டும் கனியாக மட்டுமல்ல, அனைவருக்கும் எட்டும் கனியாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உருவாக்கிக் கொடுத்திருப்பவர் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்தவகையில், இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள் தன்னுடைய கிராமத்தில் இருக்கக்கூடிய பொதுமக்கள் அனைவரும் மருத்துவ சேவையை எளிதாகப் பெறக்கூடியவகையில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நான் இந்த அவையில் சொன்னதுபோல், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 180 ஆரம்ப சுகாதார நிலையங்களை

2015 செப்டம்பர் 15] [டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, உருவாக்கிக் கொடுத்த அத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் இரண்டு மருத்துவர்களை நியமித்திருக்கிறார்கள். இன்றைக்கு ஆரம்ப சுகாதார நிலையம் மட்டும் மருத்துவ சேவை அளிக்கவில்லை. அதோடு சேர்த்து துணை ஆரம்ப சுகாதார நிலையங்களும் மருத்துவ சேவை புரிகின்றன. கிராமங்களுக்கிடையே சிறிதேனும் இடைவெளி இல்லாத அளவிற்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டதன் விளைவாக மக்களுக்கு மருத்துவ சேவை முழுமையாகக் கிடைக்கின்றது. தமிழகத்தில் 1,750 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருந்தாலும், 8,706 துணை ஆரம்ப சுகாதார நிலையங்கள் உருவாக்கப்பட்டு, அவை சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள் குறிப்பிட்ட அந்த இரண்டு பகுதிகளிலும் துணை ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

கிராமத்தில் இருக்கக்கூடிய நோயாளிகள் மருத்துவமனையைத் தேடி, மருத்துவரை நாடிச் சென்ற நிலையை மாற்றி, மருத்துவர்கள் கிராமங்களைத் தேடி, மக்களைத் தேடிச் சென்று, மருத்துவ சேவை செய்யும் நிலையை உருவாக்கித் தந்தவர் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஏறத்தாழ 416 Mobile Hospitals, Hosipital on Wheels என்று சொல்லக்கூடிய நடமாடும் மருத்துவமனைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கித் தந்து, ஒவ்வொரு நடமாடும் மருத்துவமனையிலும் மருத்துவ ஆய்வகம், செவிலியர், Pharmacist போன்ற வசதிகளோடு சிறு, சிறு குக்கிராமங்களுக்கும், ஒவ்வொரு மாதமும் நோயாளிகள் இருக்கும் இடத்திற்குச் சென்று, மாதத்திற்கு 40 முகாம்களை நடத்தி, கிராமத்தில் மருத்துவ சேவையை உறுதிப்படுத்தியிருக்கிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் 385 ஆண் மருத்துவர்கள் மற்றும் 385 பெண் மருத்துவர்கள், ஆக மொத்தம் 770 மருத்துவர்களை பள்ளிச் சிறார்களுக்காக நியமித்து, தேவையான வாகன வசதிகளை வழங்கி, அவர்கள் பள்ளிக்கே சென்று, பள்ளியில் படிக்கின்ற மாணவர்கள் மற்றும் அங்கன்வாடியில் பயிலும் குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கும் வசதியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். சிறு, குறு கிராமங்களுக்கு எல்லாம் நோயாளிகளைத் தேடிச் சென்று பரிசோதனை செய்து, மேல் சிகிச்சைக்கு வேண்டிய வசதிகளையும் செய்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[டாக்டர் சி. விஜயபாஸ்கர்] [2015 செப்டம்பர் 15

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், கிராமப்புறங்களிலும், எல்லா குக்கிராமங்களிலும் வசிப்பவர்களுக்கு மருத்துவ சேவையை உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். இந்தியாவிலேயே, முதன்மை மாநிலமாக மட்டுமல்லாமல், முன்னோடி மாநிலமாகவும், மற்ற மாநிலங்கள் எல்லாம் வியக்கக்கூடிய, பாராட்டக்கூடிய, போற்றக்கூடிய, உலக சுகாதார நிறுவனம் பாராட்டக்கூடிய அளவிற்கு தமிழகத்தில் மருத்துவ சேவையை, மகத்தான சேவையாக மாற்றிய பெருமை நம்முடைய மாபெரும் தலைவி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களையே சாரும்.

மாண்புமிகு உறுப்பினர், அவருடைய தொகுதியில் உள்ள மக்கள்தொகையைக் குறிப்பிட்டு, தனது கருத்தை வலியுறுத்தியிருக்கின்றார். கொடிக்குளம் மற்றும் இராமச்சந்திராபுரம் ஆகிய இரண்டு கிராமங்களுக்கிடையே எட்டு கிலோ மீட்டர் தூரத்தில்தான் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. இருந்தாலும்கூட, அவர் வலியுறுத்தியதன்பேரில், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, வருங்காலத்தில், நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014-2015 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 292 முதல் 296 வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.